உ

கணபதிதுணை.

ஸ்ரீ மீனாட்சிதுணை.

பாண்டிநாட்டிலேயுள்ள
மதுராபுரியைச்சார்ந்த
முப்பையூரின்கண்
எழுந்தருளியிருக்கும்

# வீரமாகாளியம்மை

## பேரில்

கலித்துறை
அகவல்
கும்மி
எச்சரிக்கை
பராக்கு

—:o:—

இவை
தேவகோட்டை
இலுப்பைக்குடிக்கோயில்
சூடாமணிபுரமுடையார்
நாக. வெ. லெ.
**இலட்சுமணன்செட்டியாரவர்கள்**
கேட்டுக்கொண்டபடி

யாழ்ப்பாணத்து நல்லூர்
ப்ரம்மஸ்ரீ
**PANDIT. வே. கநகசபாபதிஐயரவர்கள்**
பாடியன.

யாழ்ப்பாணம்
விவேகாநந்தயந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டன.

கலி: ௫00௪. சுபகிருது௵ ஆடிமீ

1902.

Digitized By Roja Muthiah Research Library

உ

சிவமயம்.

# வெண்பா.

பார்பூத்த பச்சைப் பசுங்கொடிபோன் முப்பைவளர்
பேர்பூத்த காளிபதம் பேசுதற்கு—கார்பூத்த
சார்ந்தபுளி யாலமுறை சர்க்கரைவி நாயகனை
நேர்ந்துபதம் நெஞ்சே நினை.

## கலித்துறை.

பொன்னாட்டினிலுள்ளபொற்பகத்தேகொண்டுபூவுலகி
லென்னாட்டையும்வென்றநன்முப்பையூரிலெழுந்தருளு
மின்னாட்டமூன்றுடைமாகாளிசாமுண்டிவிசிபதந்.
தென்னாட்டிலுள்ளவர்சேவித்துவான்கதிசேர்குவரே. (க)

வீரத்திறலுயர்மாகாளிதேவர்விரைமலர்தூய்
வாரத்திறலடிபோற்றிடுமுப்பைவளங்கெழுமூர்ப்
பாரத்தனத்திபயிரவிசூரிபசுநிறத்தி
ஈரத்தொடைபுனைவேதாளியென்னெஞ்சிருப்பவளே. (உ)

பேரார்பவக்கடல்பேணார்தலங்கள்பிறப்புமுற்றத்
தோரார்தவநெறியோராரர்செவ்வாம்பல்செறிகழனிச்
சீரார்தருமுப்பையூர்த்திருக்கோயில்சிறந்தமரும்
பேராருமுக்கிரமாகாளிநாமங்கள்பேசிலரே. (ங)

நீருந்தடமும்பொலிமுப்பையூரினிலவியும்ப
ராரும்பரவவரந்தருநாயகியர்க்குமுடன்
சீருந்திருவும்படைத்திட்டதாருகற்செற்றதையல்
பெரும்புகழுமுரைத்திடநீங்கும்பெருந்துயரே. (ச)

உன்னைக்கருதியிருப்பார்வினைகளொழித்தற்கென்றும்
பொன்னைப்புடமிட்டுத்தங்கமதாக்குதல்போற்புரிந்தே
செந்நெற்கழனிகழ்சூழ்முப்பையூர்தனிற்சேர்வதனாற்
பின்னற்சடைமுடிமாகாளியென்றுனைப்பேசுவரே. (ரு)

Digitized By Roja Muthiah Research Library

அந்தரிபாமளைசுந்தரியம்பிகையாரணத்தி
புந்திநிறைந்தபுராதனிகாரணிபூரணிசீர்
முந்திமுப்பையில்வந்திடுமுக்கணிமுன்னவளே
செந்துவர்வாய்ப்பசுங்கிள்ளாயெனவினைசிந்திடுமே. (௬)

காணப்பெற்றேன்முப்பையூர்க்காளிநின்பதங்கண்டுபத்தி
பூணப்பெற்றேன்கவிமாலைகள்கொண்டுபுகழ்ந்துதுதி
பேணப்பெற்றேனுனதன்பரைக்கூடிப்பிழையொழிந்து
மாணப்பெற்றேனினியந்தகன்றானும்வரவஞ்சுமே. (௭)

ஆக்கத்திறலுயர்முப்பைநல்லூர்தனிலாருள்சேர்
நோக்கத்தினோடவண்மேவுதலாற்சென்றுநோற்பவர்கள்
போக்கற்றுநின்றுமெய்யன்போடனுதினம்போற்றிசெய்து
காக்கக்கருதுவர்காண்கனிவாய்மொழிக்காரிகையே. (௮)

தென்னவன்கூடற்கணித்தாகமுப்பைசிறக்கவரு
முன்னவளேதிருத்தாண்டவமூர்த்திக்குமுன்னடித்த
வன்னக்கருங்குழன்மாகாளிமாதங்கிமாதர்வலைப்
பின்னற்படாமற்பிரித்தாள்வதென்றுபிணக்கறவே. (௯)

ஒன்றாதசெய்கைபவாரவித்தியவொழுக்கநெறி
நின்றாரெனினுமொருதரநெஞ்சினினைந்துநிதம்
பொன்றாதவீரமகாகாளிமுப்பைபொலிபவளே
என்றார்பெருமிதமுற்றிறுமாந்தங்கிருப்பர்களே. (௧௦)

தாயாகியண்டசராசரமீன்றதவக்கொடியே
வாயாதியொன்பதுவாயுமடைக்குமுன்வந்தருள்வாய்
காயாதிகீழினமென்னினுமுப்பையினண்ணுமென்றால
மாயாமல்வைக்குமகாகாளிதேவிமனோன்மணியே. (௧௧)

செப்பைப்பழித்தமுலைக்கொடிதேவர்தினம்பணியு
முப்பைப்பதியமர்மாகாளியென்றுமுடிவுமுத
லொப்புச்சொலற்கரிதாகியநீலியையொன்றினல்லாற்
றப்பிப்பிழைத்தலரிதுகண்டீர்பவசாகரமே. (௧௨)

கந்தாமுப்பையில்வாழ்சூலிதன்னைத்துதித்துவந்து
சந்ததம்போற்றுமடியார்பதங்களைச்சார்ந்துறுவோ

Digitized By Roja Muthiah Research Library

ரிக்கிரகுருதியர்தம்பதமேவியிடரடையார்
சுந்தரியாமளையந்தரிபாதங்களொன்றுவரே. (௧௩)

நாயேனினதுதிருவடிப்பத்திநலமறியாப்
பேயேனெனநினைந்தென்றனைநீக்கிற்பிறருமுண்டோ
வேயானதுமிளிர்முத்தீனுமும்பையின்மேவியமர்
தோயாதபூந்துகிற்றொன்மறைதேடியதூவொளியே. (௧௪)

அந்தாமரைமிசையன்னங்கள்வைகுமணிகொள்மும்பை
வந்தாதரித்துவளர்பசும்பொற்கொடிமாதங்கியே
சிந்தாகுலந்தனைத்தீர்த்தெனையாண்டுசிறப்பருளி
நந்தாப்பெருவளநல்கிடுவாய்நனிநாயகியே. (௧௫)

---

## அகவல்.

திருவளர்மருமத்துருவளர்கோனு
மருவளர்தாமரைமலருறைபிரமனு
மெத்திசையோர்களுமெண்ணிலாமுனிவருஞ்
சத்துறுவேதமுந்தாமறியொண்ணாச்
சிற்பரசின்மயசிதம்பரவடிவுடைச்
சொற்பதங்கடந்தசுந்தரக்கடவுள்
துணிவுறுமலயத்துவசமன்னன்
மணியெனப்பெற்றவணியியலன்னம்
வெள்ளைச்சிறுநகைக்கிள்ளைப்பிள்ளை
யெள்ளருங்குயிலெனவியம்பும்பேடை
யலகில்சராசரமனைத்தையுமீன்று
மிலகுறுங்கன்னியெனும்பெயர்புனைந்து
பங்கயத்துறைபவர்பரசிவணங்கு
மங்கயற்கண்ணியாகியவன்னையை
யருளொடுகூடியறுபத்துநான்கெனுந்
திருவிளையாடல்செய்தினிதமர்ந்த
விழுமதுப்பிலிற்றியவேதன்றன்
மதுரையெனும்வான்பெயர்புனைந்த

Digitized By Roja Muthiah Research Library

நன்னகர்தன்னைத்தன்னிடத்துடைய
பன்னரும்புகழ்சேர்பாண்டிமண்டலத்திற்
றெங்கிளங்குலையுடன்சீர்வளர்பனச
மங்கலவருக்கைமாம்பழங்கதலி
மாதுளங்கனியுடன்மதுர்நாரங்க
மேதகுகனியுமிகுமதுரசமுஞ்
சீதமார்குடசஞ்சேர்ந்திடுகனியுஞ்
சிந்திடுதேன்கள்செறிந்துசிராரு
யுந்தியைநிரப்பியுயர்வயலேறிச
செந்நெலினூற்றைச்சீர்பெறவளர்த்துக்
கன்னலுங்கமுகுங்கசியநன்றாட்டி
யமுதினுஞ்சுவைத்தெனவவனியோர்க்கேற்று
மமுதர்மாநகரினுமழகினிற்சிறந்து
சோலையும்வாவியுந்துலங்குசெய்குன்றுஞ்
சாலையுஞ்சதுக்கமுந்தமனியமன்றமுங்
கோபுரமணிமதில்குலவியசிகர
மாபுரமாவணம்வளமிகப்பெருகிய
முப்பையூர்நகரின்முதல்வியேயுமையே
செப்பமாருலகோர்செய்தவப்பயனே
சங்கரசிவபிரான்தற்பரசதாசிவன்
மங்கலையுமையாள்வடிவொளிர்ம்ச
காரணிதற்பரைகாளிஓங்கார
சீரணியம்பிகைசெல்வியேதிருவே
இந்திரைநாமகளிந்திரன்றேவி
சுந்தரிவாமைதுலங்கியசேட்டை
லளிதைமாதேவியினியசாமுண்டி
வளமுறுபைரவிமதங்கியேயாதியாங்
கன்னியர்பதம்பணிகௌரியேசிவையே
சென்னியின்மதியுந்திருச்சடையழகும்
அருண்மழைபெருகியவம்புயமுகமும்
வரமிகுவரிவிழிவாய்ந்தமுக்கண்ணும்
நத்துமுக்குத்திநனுகுயில்லாக்கு
வைத்திடுநாசிகைவளம்பெறுமழகுங்
கோலமார்வக்கிரங்கொண்டபல்லழகுங்

சிலமார்கொப்புச்சிறந்திடுகம்மல்
முருகுடன்மச்சமுன்னெதிரணியும்
விரைகருநாகமேவுகாதணியும்
பட்டிகையாரமிசைநவரத்ந
வட்டமார்பதக்கமல்லியசரப்பணி
கொத்துமுத்தாரங்குளிர்மணியாரம்
வைத்தொளிர்கின்றவண்ணமார்கழுத்துந்
தாருகன்சும்பன்றகுதிருச்சும்பன்
வீரமார்மகிடன்விறன்மதுகைடவன்
தூம்பிரலோசனன்றுதிசண்டமுண்டன்
மேம்படுரத்தபீசனங்குரனே
ஆதியாமசுரரையழித்தபல்படைகண்
மீதுறக்கங்கணமிகுபரிசயந்து
சரிவளைநாகஞ்சவிதமாராழி
வரமிகுதிருக்கரமாட்சிசேரழகுங்
குடத்தினிற்பருத்துக்கோண்மதவேண்ம
குடத்தினைச்சினந்துகுவிந்தழகொழிர்ந்து
சாயாத்தகையாத்தண்ணெனவெச்சென
மீயாரமுதம்விளைந்திடுஞானமாய்க்
கச்சிறுள்ளடங்காக்கனத்திடுதனமு
மெச்சிடுகற்பகமேவிடுவல்லியாய்த்
துடியினும்வானிற்றோற்றியமின்னற்
கொடியினுஞ்சிறந்தகோலமாரிடையு
மிந்திரவர்ணப்பட்டுநல்லுடையுஞ்
சுந்தரச்சதங்கைதுலங்கியதண்டை
பாடகநூபுரம்பாதசாலந்திரு
வேடவிழ்சதங்கையிலங்குகாலாழி
யாதியவணிசெயம்புயப்பாதமும்
பச்சைமாமேனிப்பண்புறுமழகும்
பிச்சிமந்தாரைபெருகுசெவ்வாம்ப
லாத்திகூதாளமம்புயந்துளசி
மீத்தகுமல்லிகைவெட்சிசெவ்வந்தி
யாதியநறுமலர்மாலிகையசையக்

கோதமாருக்கிரங்கொண்முகமாகி
வுங்காரசத்தமேலுலகெலாநடுங்கச்
சிங்காரமாருளைச்செறிமயிர்வாலு
மும்மையும்வளைக்துமுந்துகானன்குஞ்
செம்மணிச்சதங்கைகிங்கிணியாடச்
சேர்ந்திடுசிங்கவாகனஞ்செறிந்து
குடமுழாப்பணவங்கொக்கரைதடாரி
திடமிகுமுறுமிதித்திபுள்ளாங்குழல்
பேரிகைதக்கைபெருகியநிசாளஞ்
சீரியதவண்டைதிண்டிகைமத்தள
முருடுடன்மொந்தைமுகிர்ந்தவெக்காளந்
திருமிகுமிடக்கைசிறந்திடுமுடுக்கை
பம்பைதம்பட்டம்பரவியசல்லரி
நம்புசீர்மதங்கநவின்றிடுசங்கஞ்
சின்னமுந்தாரையுஞ்சிறந்திடுவாங்கா
முன்னியதிமிரிமுகவீணைமுழங்க
வீணைசாரங்கிமெல்லொலியியம்ப
வாணைக்கொடிகுடைமயிலியல்விசிறி
யாலவட்டம்மழகமைந்திடுகவரி
சிலமார்கட்டியஞ்சேர்ந்திடுதண்டம்
பிச்சமார்பீலிபெயர்ந்தழகெறிப்ப
வானவர்முனிவர்மன்னவர்துதிப்ப
மானிகர்விழியார்வரைநடமியற்ற
சந்திரவாணந்தயனனேர்வாணம்
விந்தைமத்தாப்புவியனிலவிறிசு
தாரகைவாணஞ்சக்கரவாணஞ்
சீர்பகல்வெற்றிதிரைகடன்முழங்கி
தோடணிசக்கரஞ்சுழலுறுசக்கரம்
பீடுறுகாவடிபெருகுதேர்கோட்டை
வாணமுங்குரங்குவாணமாலாவுஞ்
சிலமாரத்திங்களின்வாணம்
தெளிதுளிவாணநேர்ந்திடுகலாபி
கழிதருவாணஞ்சூறைசார்வாணங்
குண்டுபீரங்கிகோலமாரதிர்வெடி

Digitized By Roja Muthiah Research Library

யெண்டிசையினுமிகவெழிற்பெறமுழங்கப்
பூமலர்மாரிபுவியினைநிறைப்ப
நேமமார்தீபநிறைந்தொளிசிறப்ப.
வகிலுந்தூமமுமரியசீர்வேள்வி
யிருபெருந்தூமமும்விண்ணினையளப்ப
விருக்கெசுசாமமியலதர்வணத்தின்
வருக்கமார்சாகைவகைகளியாய்ந்து
பதஞ்சடைகிரமம்பாங்குறவுச்ச
மிதஞ்செறிதாரமிசைதொனிமுழங்க
திருவுலாப்போந்துசெசத்தினுக்கருளு
மருமருந்தாகியவம்மையேபரைவே
பூம்புகார்நின்றும்போந்திடுவசியர்
மேம்படுகுலத்தின்மிக்கசிந்தாமணி
இருப்பைக்குடிக்கோயிலேய்ந்துளமகிமை
தரிப்புறுவேங்கடாசலப்பெயர்ச்செட்டியார்
கொடைநடையோகைகுணநடுநிலைமை
வடிவெலாஞ்சிறந்தமாமணித்தியம்
லட்சுமணச்செட்டியாரிந்திரைவசீகர
லட்சணவேங்கடாசலேந்திரச்செட்டியார்
பூமிநேர்பொறையும்புகழுநீளிராம
சாமிசீர்ச்செட்டியார்சம்பனமனோகர
நாச்சியப்பப்பெயர்நண்ணியசெட்டியார்
வாச்சசெந்திருமுகமங்கலகுணாகர
வெண்ணுநற்சேதுராமனாதச்செட்டியார்
நண்ணுசீர்யழனியப்பச்செட்டியார்
வண்ணமாரிங்கிவர்மனமகிழ்செல்வம்
புத்திரர்களத்திரம்பொங்குசீராயுண்
மித்திரர்கனைதவிளங்கிமென்மேலுந்
இடமிகுகாத்திரந்தேவிநின்பத்திமை
வடிவுறுமன்னதானநன்மாட்சி
வர்த்தகப்பெருக்கமரக்கலவளங்கள்
நித்தமுநல்குகநிமலைமாகாளியே.

—o—



ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR—623 106
P.M.DIST. INDIA

Digitized By Roja Muthiah Research Library

## கும்மி.

துங்கமிகும்புலியாலத்தின்மேவிய
தும்பிமுகக்கணநாயகன்பாதங்கள்
செங்கையாற்கூப்பிநந்தேவிபதமலர்
தேடிக்கும்மியடியுங்கடி (௧)

இந்திரர்வானவர்சந்திரசூரிய
வேதாந்தஞானியர்போற்றிசெயும்
அந்தரியாமளைசுந்தரிபாதத்தை
வண்டிக்கும்மியடியுங்கடி (௨)

வேதாந்தத்துட்பொருளாகியரூபிணியை
வெற்றிமகிடனைச்செற்றநல்வித்தையை
நாதாந்தத்தன்னினடித்தவடன்பதம்
நாடிக்கும்மியடியுங்கடி (௩)

கொண்டையிற்பூக்கள்குலுங்கிச்சிறந்திடக்
கோதும்வரியளிமீதுபறந்திட
தண்டைகொலுசுசதங்கைமுழங்கிடத்
தாவிக்கும்மியடியுங்கடி (௪)

மின்னார்வரிவிழிமைகளிலங்கவே
வெள்வளைகங்கணந்தாமுந்துலங்கவே
பொன்னார்நூடமுலைதாருங்குலுங்கவே
போற்றிக்கும்மியடியுங்கடி (௫)

துட்டமகிடனைவெட்டியவீரத்தைச்
சூலம்பிடித்தருள்கோலத்தைவாரத்தை
மட்டில்லாத்தாருகற்செற்றதிறத்தினை
வாழ்த்திக்கும்மியடியுங்கடி (௬)

புண்ணியமேவியமுப்பைநகரொளிர்
பூரணிகாரணியாரணிசீர்
வண்ணமலரிணைநேரும்பதங்களை
வாழ்த்திக்கும்மியடியுங்கடி (௭)

Digitized By Roja Muthiah Research Library

சண்டிகையம்பிகைமாதரிமாலினி
சங்கரியந்தரியோங்காரி
பிண்டியதாருகற்செற்றிடுவிந்தையை
வேண்டிக்கும்மியடியுங்கடி (௮)

நீடங்கஞ்சவ்வாதுகமகமெனநல்ல
நெற்றியிற்கஸ்தூரிகுமுகுமென்ன
மாடங்கள்கூடங்கள்சேர்ந்திடுமுப்பையூர்
வாழ்த்திக்கும்மியடியுங்கடி (௯)

இந்திரலோகத்தரம்பையுருப்பசி
லட்சுமிநாமகள்வந்துநிதம்
அந்தரியம்மையைப்பூசிக்கிறார்பார்த்து
ஆடிக்கும்மியடியுங்கடி (௧௦)

வீரமிகுஞ்சிங்கவாகனமேறியே
வெற்றிமிகுங்கருணைத்திறந்தேறியே
ஆரணியம்மையெழுந்தருள்கோலத்தை
யாடிக்கும்மியடியுங்கடி (௧௧)

தன்னைவணங்கியதேவர்முனிவரர்
தங்களுக்கின்னருடானுமுதவியே
கன்னிகையெங்களைக்காக்குந்திறத்தினைக்
கண்டுகும்மியடியுங்கடி (௧௨)

வேதமுடிவாய்ப்பிரணவமாகியே
மேவியமந்த்ரரூபமதாய்
ஆதியுமந்தமுமாகியகாளிமுன்
னாடிக்கும்மியடியுங்கடி (௧௩)

சித்திரமேவியபத்திரகாளிமெய்ச்
சீர்கெழுமற்புதகாரணியை
சுத்தநிர்பாகரவுத்தமியம்மையைச்
சொல்லிக்கும்மியடியுங்கடி (௧௪)

பூமியும்வானுமுலக்கும்வாழவே
பொற்புமிகுங்காளிநல்லருள்வாழவே

Digitized By Roja Muthiah Research Library

ஏமமிகுமுப்பையூர்மிகவாழவே
எண்ணிக்கும்மியடியுங்கடி. (கரு)

## எச்சரீக்கை.

திருவார்புக ழருண்மேவிய தேவி — எச்சரீக்கை
சீரார்தரு முப்பைநகர்த் திருவே — எச்சரீக்கை
உருவார்பரை யுமையாமளை யொளியே — எச்சரீக்கை
ஓங்காரநல் வழிதேறிய வொளியே — எச்சரீக்கை
மருவார்குழன் மகிடாரியே மணியே — எச்சரீக்கை
வனமாலிகை யுடையார்பணி வாழ்வே — எச்சரீக்கை
கருவாருயிர் தமைக்காத்தருள் கண்ணே — எச்சரீக்கை
கருணாகர வரமேவிய கதியே — எச்சரீக்கை

## பராக்கு.

சீர்வளரு முப்பைநகர்த் திருவே — பராக்கு
சிங்கார ரீங்கார வுருவே — பராக்கு
ஏர்வளரும் பிரணவமா ருருவே — பராக்கு
எண்ணியன எண்ணியருள் குருவே — பராக்கு
தார்வளருஞ் சடைமுடியெந் தாயே — பராக்கு
சாம்பவியே முக்கணிமெய் நீலீ — பராக்கு
பார்வளரும் பரஞ்சுடரே நிதியே — பராக்கு
மாவலர்சோ லின்னுரைபி னறுதியே — பராக்கு.

திருச்சிற்றம்பலம்.

Digitized By Roja Muthiah Research Library